வேறு பயங்கரமான பாதிப்போ வாராது. எனவே ஆசிரியர்களுக்கான உரிமைகள் வழங்கப்படுவது அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். தொழிற் சங்க உரிமைகளை வழங்கும்போது அதற்கான கண்ணோட்டம், சட்ட திட்டங்கள், விதி முறைகள், மற்றவைகள் மாறுபடுகின்றன. ஆசிரியர்களுக்கான சட்ட திட்டங்கள் மாறுபடுகின்றன. ஆகவே இப்போது ஆசிரியர்களுக்கு இருக்கின்ற அதே நிலைதான் இருக்க வேண்டுமென்று அரசினுடைய கருத்தாகும்.

Evening Colleges.

* 36. Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government are aware that a large number of persons seeking admission into the evening colleges are denied admission due to paucity of seats in Madras City and in the districts; and

(*b*) the steps taken thereon?

மாலை நேரக் கல்லூரிகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலும், மாவட்டங்களிலும் உள்ள மாலை நேரக் கல்லூரி களில் சேர விழையும் மாணவர்களில் பலருக்கு இடப்பற்றுக்குறை காரணமாக அனுமதி மறுக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா?

(இ) இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இதுபற்றி அரசுக்கு யாதொரு புகாரும் வரவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, சென்னையிலே பெண்கள் மாலை நேரக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது சென்னையிலே பெண்களுக்கு மாலை நேரக் கல்லூரி இருந்து வருகின்றது. இராணி மேரிக் கல்லூரியில் இருக்கிறது. அங்கே புகுமுக வகுப்பில் 180 இடங்களும், பி.ஏ. பட்டப் படிப்பில் 100 இடங்களும் இருக்கின்றன. ஆனால் வந்து சேர்ந்திருப்பவர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். புகுமுக வகுப்பிற்கு 180 இடங்கள் ஒதுக்கப்பட்டாலும், 17 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். பட்டப் படிப்புக்கு 100 இடங்கள் ஒதுக்கப்பட்டாலும், 43 பேர்கள்தான் சேர்ந்திருக்கிறார்கள். அதைத் தவிர வட சென்னை பெண்கள் கல்லூரியில் புகுமுக வகுப்பிற்கு 200 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதில் 24 பேர்களும், பட்டப் படிப்பிற்கு 120 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதில் 10 பேரும் சேர்ந்திருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மாலை நேரக் கல்லூரிகளுக்கு வருகின்ற மாணவர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள் என்று சில இடங்களிலிருந்து அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா? அதை அரசு ஆராயுமாவென்று அறிய விரும்புகிறேன். மேலும் அவர்களுக்கு அட்டென்டன்ஸ் உண்டா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பகல் நேரக் கல்லூரிகளில் என்ன விதி முறைகள் இருக்கின்றனவோ, அதே விதிமுறைகள் தான் மாலை நேரக் கல்லூரிகளிலும் கையாளப்படுகின்றன. சொல்லிக் கொடுக்கிற கால அளவு நீட்டிக்கப்படுகிறது. மாலை நேரக் கல்லூரிகளைப் பொறுத்த வரையில், ஆண்கள் கல்லூரிகளில் எல்லா இடங்களும் நிரம்புகின்றன. போகப் போக பெண்கள் கல்லூரிகளில் உள்ள இடங்களும் நிரம்பக் கூடும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, மாலை நேரக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், காலை நேரக் கல்லூரிகளிலும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். மாலை நேரக் கல்லூரிக்குத் தனியாக ஆசிரியர்களை நியமித்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு வசதியாக இருக்கும். சில கல்லூரிகளில் பகல் நேரத்தில் பணி புரிபவர்களே மாலை நேரத்திலும் பணி புரியும் நிலை இருக்கிறது. எனவே படித்து வேலையில்லாத முதுநிலைப் பட்டதாரிகளுக்கு மாலை நேரக் கல்லூரிகளில் வேலை வாய்ப்பு கொடுக்க அரசு தக்க உத்தரவு பிறப்பிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போதிருக்கும் ஏற்பாட்டில் எவ்விதக் குறைபாடும் இருப்பதாகத் தெரியவில்லை. மாலை நேரக் கல்லூரிகளுக்கு தனியாக நியமித்தால், அதிகச் செலவாகுமென்று தெரிகிறது. பகல் நேரக் கல்லூரியில் பணி புரிபவர்களே, தனி ஊதியம்

1974 சனவரி 23]

பெற்று, மாலே நேரக் கல்லூரிகளேயும் கவனித்துக்கொண்டிருக்கிறுர்கள். ஏராளமான மாணவர்கள் மாலே நேரக் கல்லூரிகளில் சேரும்போது, அது பற்றித் தனியாக யோசிக்கலாம்.

Sanskrit Colleges

* 37. Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Sanskrit Colleges in our State and the places where they are located;

(*b*) among them, the number of colleges run by the Government and the number of colleges under private management;

(*c*) the number of students studying there; and

(*d*) among them, the number of students belonging to foreign countries and the neighbouring States?

சம்ஸ்கிருதக் கல்லூரி

திரு. எல். பலராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நம் மாநிலத்தில் சம்ஸ்கிருதக் கல்லூரிகள் எத்தனே, எங்கெங்கு உள்ளன?

(இ) அவைகளுள் அரசு எத்தனே நடத்துகிறது? தனியார் எத்தனே நடத்துகின்றனர்?

(உ) எவ்வளவு மாணவர் பயில்கின்றனர்?

(எ) அவர்களுள் அன்னிய நாட்டு—அண்டைய மாநில மாணவர் எத்தனே?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) சென்னே, மைலாப்பூரில் "சென்னே சம்ஸ்கிருத கல்லூரி" என்ற பெயரில் ஒரு கல்லூரி மட்டும் இம்மாநிலத்தில் உள்ளது.

(இ) சென்னே சமஸ்கிருதக் கல்லூரி தனியார் துறையைச் சார்ந்தது. அரசு துறையில் எக் கல்லூரியும் இல்லே.

(உ) சென்னே சம்ஸ்கிருதக் கல்லூரியில் 20 மாணவர்கள் "சிரோன்மணி" வகுப்பில் பயில்கின்றனர்.